

தேனி ஊராட்சி ஒன்றியம், வெங்கடாச்சலபுரம் ஊராட்சியில் தமிழக அரசின் திட்டங்கள், சாதனைகள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் காண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர்.



ராஜபாளையம் நகர் காங்கிரஸ் கமிட்டி சார்பில் இந்திய தேசிய காங்கிரஸின் முன்னாள் தலைவரும் பாராளுமன்ற குழு தலைவருமான சோனியா காந்தியின் 79-வது பிறந்த நாளை முன்னிட்டு ராஜபாளையம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் (சொக்கர் கோவில் ) நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் சங்கர் கணேஷ் தலைமையில் விருதுநகர் மேற்கு மாவட்ட தலைவர் ரங்கசாமி முன்னிலையில் சிறப்பு வழிபாடு நடைபெற்று பொதுமக்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் பிரபாகர், நகர்மன்ற உறுப்பினர் புஷ்பம், ரவி ராஜா, ஏ.பி.சக்தி, பசும்பொன், வெங்கட்ராமன், ராஜாராம், லட்சுமணன், முனியாண்டி, பச்சையாத்தான் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## வத்தலக்குண்டுவில் பேரூராட்சிகளின் இயக்குனர் ஆய்வு



**வத்தலக்குண்டு, டிச. 10-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டுவில் பேரூராட்சிகளின் இயக்குனர் ஆய்வு செய்தார்.

பேரூராட்சிகளின் இயக்குனர் பிரதீப்குமார், இணை இயக்குனர் காளியப்பன். திண்டுக்கல் மண்டலம் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் ராஜா ஆகியோர் வத்தலக்குண்டு பேரூராட்சி குப்பை கிடங்கை பார்வையிட்டனர்.

அங்கு துணிக்கழிவுகளிலிருந்து கால்மிதியடி தயாரிப்பதையும், மண்புழு உரம் தயாரிப்பதையும், உணவுக் கழிவுகளை கொண்டு மாடு வளர்ப்பதையும், பூங்கா அமைத்துள்ளதையும் பார்வையிட்டனர். பின்னர் காந்திநகர் பகுதியில் குடிநீர் குழாய் இணைப்புகளை பார்வையிட்டார். அதைத்தொடர்ந்து வத்தலக்குண்டு பேரூராட்சி அலுவலகம் அருகே ஒரு கோடியே 25 லட்சம் நிதியில் கட்டப்படும் புதிய கூடுதல் கட்டிட பணிகளை பார்வையிட்டார்.

அவருடன் பேரூராட்சி இளநிலை பொறியாளர் கருப்பையா, வத்தலக்குண்டு பேரூராட்சி தலைவர் சிதம்பரம், துணைத்தலைவர் தர்மலிங்கம், செயல் அலுவலர் சரவணகுமார், தலைமை எழுத்தர் முருகேசன் மற்றும் பேரூராட்சி கவுன்சிலர்கள் உள்பட பலர்சென்றிருந்தனர்.

## மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் நாகர்கோவில் ஷோரூமில் கலைநயமிக்க நகைகளின் கண்காட்சி-விற்பனை துவக்கம்




**நாகர்கோவில், டிச. 10-**

கலைநயமிக்க நகைகளின் கண்காட்சி தற்போது மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் நாகர்கோவில் ஷோரூமில் நடைபெற்று வருகிறது. தலைசிறந்த நகை வடிவமைப்பாளர்களால் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த நகைகள் ஒவ்வொன்றும் அந்த கலைஞர்களின் நிபுணத்துவத்தையும் தனிப்பட்ட திறன்களையும், அனைத்து நகைகளிலும் ஒரு கலைநயம் இருக்கிறது என்பதை நிருபிக்கும் வகையிலும் உள்ளன.

இந்த கண்காட்சியை ஜார்ஜ் அந்தோணி, பசிலியன் நசரேத், ஷர்மிளா, ஜெய நாராயணி ஆகியோர் துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் ரினித் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் நாகர்கோவில் கிளை தலைவர்), ஷாலு மேத்யூ (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் நாகர்கோவில் கிளை துணை தலைவர்), அமல் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் நாகர்கோவில் கிளை துணை தலைவர்) துவாரகாநாத் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் நாகர்கோவில் கிளை வர்த்தக மேலாளர்), மற்றும் கிளை ஊழியர்கள் ஆகியோர் உடனிருந்தனர். கலைநயமிக்க இந்த கண்காட்சி டிசம்பர் 06-2025. முதல் டிசம்பர் 14-2025. வரை நடைபெறும். இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ள நகைகளை வாடிக்கையாளர்கள் சிறப்பு விலையில் வாங்கலாம்.

மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் விற்பனையகத்தில் கலைநயமிக்க அணிகலன்கள் கிடைப்பது சிறப்பம்சமாகும் .அணிந்தாலே ஜொலிக்கும் வைர நகைகளான 'மைன்' பிரம்மாண்டமான வடிவமைப்புகளை கொண்டுள்ள வெட்டாத வைரத்தால் செய்யப்பட்ட எரா மிகவும் பொக்கிஷமாக கருதப்படும் விலை உயர்ந்த கற்களால் செய்யப்பட்ட நகை தொகுப்பான பிரீசியா நகைகள், கைவினை கலைஞர்களால் கையால் செய்யப்பட்ட நகைகளின் தொகுப்பான எத்தினிக் நமது கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் பாரம்பரிய இந்திய நகை வடிமைப்புகளில் உருவான டிவைன் குழந்தைகளுக்கான நகை தொகுப்பான ஸ்டார்லெட் ஆகியவை இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. இதைத்தவிர அழகிய நகைகளை சிறப்பு சலுகையில் வாங்கவும் வாய்ப்பளிக்கப்படுகிறது.

மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தற்போது 14 நாடுகளில் 425-க்கும் மேற்பட்ட சில்லறை விற்பனை நிலையங்களுடன் உலகில் மிகப்பெரிய நகை விற்பனை நிறுவனமாக உருவெடுத்துள்ளது. தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோயில், சேலம், திருச்சி, ஈரோடு, வேலூர், இராமநாதபுரம், ஈரோடு, தருமபுரி, தஞ்சாவூர், கும்பகோணம், திருப்பூர், காரைக்குடி, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, மார்த்தாண்டம், புதுச்சேரி, கரூர், செங்கல்பட்டு, கடலூர், ஒசூர், ஆகிய நகரங்களில் 32 கிளைகளை கொண்டுள்ளது.

## அலங்காநல்லூர் சந்ததம் பால் சுவாமி சித்தர் சிவன் கோவிலில் வருஷாபிஷேக விழா



**அலங்காநல்லூர், டிச. 10-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர், சந்தைமேடு பகுதியில் அமைந்துள்ள சந்ததம் ஸ்ரீபால் சுவாமி சித்தர் சிவன் கோவில் வருஷாபிஷே விழா மற்றும் குருபூஜை விழா நடைபெற்றது. இந்த சிறப்பு யாகசாலை பூஜையில் சிவபெருமானுக்கு பல்வேறு ஹோமங்கள், சிறப்பு அபிஷேகங்கள் அர்ச்சனைகள் செய்யப்பட்டது. தொடர்ந்து 108 வலம்புரி சங்குகளில் சிறப்பு அபிஷேகம், சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க நடைபெற்றது.

பின்னர் அழகர்கோவில், ராமேஸ்வரம் உள்ளிட்ட புண்ணிய காலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் சிவபெருமான் மீது ஊற்றப்பட்டு மண்டல அபிஷேகம் நடைபெற்றது. பின்னர் சுவாமிக்கு பல்வேறு மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர். ஏற்பாடுகளை சந்ததம் பால்சுவாமிகள் மடாலயம் வகையறா பங்காளிகள் செய்திருந்தனர்.

### பயணத் துறையிலேயே முதன்முறையாகத் தனிப்பயனாக்கப்பட்ட தள்ளுபடி உருவாக்கும் அம்சத்தை ரெட்பஸ் அறிமுகப்படுத்தியுள்ளது

**சென்னை, டிச 10-**

உலகின் மிகப்பெரிய ஆன்லைன் பேருந்து டிக்கெட் முன்பதிவு தளமான ரெட்பஸ் பயணத் துறையில் முதல்முறையாக கூப்பன் கிரியேட்டர் என்ற தனிப்பயனாக்கப்பட்ட டிஜிட்டல் அம்சத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் பயனர்கள் பிறந்தநாள்கள், திருமணங்கள், கல்லூரி விழாக்கள் போன்ற சிறப்பு நிகழ்வுகளுக்காக தனிப்பட்ட கூப்பன் குறியீடுகளை உருவாக்கி பகிர முடியும். செயலியில் மட்டுமே கிடைக்கும் இந்த அம்சம், புதிய பயனர்களுக்கு 15% ( ரூ.400 வரை) மற்றும் ஏற்கனவே உள்ள பயனர்களுக்கு 2% ( ரூ.400 வரை) தள்ளுபடிகளை வழங்குகிறது. ஒரு பயனர் மாதத்திற்கு ஒரு கூப்பன் மட்டுமே உருவாக்கலாம்; இது 30 நாட்கள் செல்லுபடியாகும்.

நிகழ்வின் தீமைத் தேர்வு செய்து, தனித்துவமான கூப்பன் குறியீட்டை உருவாக்கி, வாட்ஸ்அப் மூலம் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் உடனடியாக பகிர முடியும். ரெட்பஸ் பின்தள தொழில்நுட்பம் கூப்பனை பாதுகாப்பாகச் செயல்படுத்தி, புதிய மற்றும் பழைய பயனர்களை தானாகவே வேறுபடுத்தி, பொருத்தமான தள்ளுபடியை வழங்குகிறது.இது குறித்து ரெட்பஸ் தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரி பல்லவி சோப்ரா கூறுகையில், கூப்பன் கிரியேட்டர் பயணத்தையும் கொண்டாட்டங்களையும் இணைக்கும் ஒரு புதிய வழியை உருவாக்குகிறது.இது மிக உயர்ந்த அளவிலான தனிப்பயனாக்கலை வழங்கும் துறையின் முதல் அம்சம் என்று கூறினார்.மக்களை மேலும் தனிப்பட்ட மற்றும் நினைவில் நிற்கும் அனுபவங்களின் மூலம் இணைக்கும் தொழில்நுட்ப அம்சங்களை அறிமுகப்படுத்தி, இந்தியாவின் டிஜிட்டல் பயணச் சூழலில் ரெட்பஸ் தொடர்ந்து புதுமையை முன்னெடுத்து வருகிறது.

## மகாராஷ்டிரா ஒரே மாதத்தில் அதிக சூரிய வேளாண் பம்புகள் நிறுவி உலகச் சாதனை

**சென்னை, டிச 10-**

மகாராஷ்டிரா மாநில மின்சார விநியோக கழகம் வெறும் 30 நாட்களில் 45,911 ஆஃப்கிரிட் சூரிய வேளாண் பம்புகளை நிறுவி கின்னஸ் உலகச் சாதனையில் இடம்பிடித்துள்ளது. புதுப்பிக்கத்தக்க ஆற்றலை விவசாயத்துடன் இணைக்கும் இந்தியாவின் மிகப்பெரிய முயற்சிகளில் இது ஒன்றாகும். பிஎம்-கேயூஎஸ்யூஎஸ் மற்றும் எம்டிஎஸ்கேபிஓய் திட்டங்களின் மூலம் விரைவான நிறுவல்கள் மேற்கொள்ளப்பட்டதால், விவசாயிகள் டீசல் செலவில் இருந்து விடுபட்டு, சுற்றுச்சூழல் நட்பு பாசனத்தைப் பெறுகின்றனர். வடிவமைக்கப்பட்ட திட்டமிடல், விற்பனையாளர் பொறுப்புணர்வு, மாவட்ட அளவிலான வேகமான நிறுவல் ஆகியவை எம்எஸ்இடிசிஎல் சாதனையின் முக்கிய காரணங்களாகும். இந்த முன்னேற்றம் குறித்து ஜி.கே. எனர்ஜியின் சிஎம்டி & சிஇஓ ஜி.கிருஷ்ண குமார் கூறுகையில், எம்எஸ்இடிசிஎல் சிஎம்டி லோகேஷ் சந்திரா மற்றும் மாநிலத்தின் துணை முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் ஆகியோர் பெருமையை வெளிப்படுத்தினர்.

சூரிய பாசனம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தி, மாநில மின்சார கட்டமைப்பின் சுமையை குறைக்கும் வரலாற்றுச் செயலாக இது பாராட்டப்பட்டது என்று கூறினார்.

## பரமக்குடியில் லஞ்சம் பெற்ற வி.ஏ.ஓ கைது

**பரமக்குடி, டிச. 10-**

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகாவை சேர்ந்த புகார்தாரர் வேந்தோணி கிராமத்தில் உள்ள ஒரு இடத்தை தனது தாயார் பெயரில் கடந்த நம்பர் 20-ம் தேதி பரமக்குடி சார்பதிவகத்தில் கிரையம் செய்துள்ளார். மேற்படி சொத்திற்கு புகார்தாரர் தனது தாயார் பெயரில் பட்டா பெயர் மாறுதல் சம்மந்தமாக வேந்தோணி வி.ஏ.ஓ கருப்புசாமி (58) என்பவரை கடந்த வாரம் சந்தித்து விவரம் கேட்ட போது வி.ஏ.ஓ கருப்புசாமி பட்டா மாறுதல் செய்ய எனது லாகினுக்கு வரவில்லை வந்தவுடன் செல்கிறேன் என மனுதாரரின் போன் நம்பரை வாங்கியுள்ளார். பின்பு சில நாள்கள் கழித்து மனுதாரரின் போன் நம்பருக்கு பட்டா பெயர் மாறுதலாகி விட்டதாக மெசேஜ் வந்துள்ளது. பின் வேந்தோணி வி.ஏ.ஓ மனுதாரருக்கு போன் செய்து நேரில் வந்து தன்னை பார்க்குமாறு மனுதாரிடம் கூறியுள்ளார்.



அதன்பின்பு சில நாள்கள் கழித்து மனுதாரர் அவரை நேரில் சந்தித்து விவரம் கேட்ட போது மனுதாரரிடம் நான் பரிந்துரை செஞ்சதால் தான் உங்க அம்மா பெயரில் பட்டா கிடைத்தது.எனவே தனக்கு ரூ. 15000-ம் கொடுக்க வேண்டும் என வி.ஏ.ஓ கரராக கேட்டுள்ளார்.அதற்கு மனுதாரர் தன்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என கூறியதற்கு கருப்புசாமி ரூ. 2000-ஐ குறைத்து நாளைக்கு காலையில் ரூ. 13000 ஐ தருமாறு கரராக கூறியுள்ளார்.

எனவே லஞ்சம் கொடுக்க விரும்பாத மனுதாரர் இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலிஸில்புகார் செய்தார். அதன் அடிப்படையில் லஞ்ச ஒழிப்பு துறை போலிஸார் அவர்களின் அறிவுத்தலின் பேரில் ரசாயனம் தடவிய பணத்தினை ரூ.13000-ஐ வி.ஏ.ஓ கருப்புசாமியிடம் கொடுக்கும் போது லஞ்ச ஒழிப்பு போலீசார் நேற்று அவரை கையும் களவுமாக பிடித்தனர்.மேற்படி நபர் மீது தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

## அருப்புக்கோட்டை: ஜெய் சாய்ராம் கல்லூரியில் வன்கொடுமை தொடர்பாக விழிப்புணர்வு முகாம்



**அருப்புக்கோட்டை, டிச. 10-**

அருப்புக்கோட்டை வட்ட சட்ட பணிகள் குழு மற்றும் ஜெய் சாய்ராம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இணைந்து பெண்கள் பாலியல் வன்கொடுமை மற்றும் டிஜிட்டல் மூலம் வன்கொடுமை தொடர்பான சட்ட விழிப்புணர் முகாம் ஜெய் சாய்ராம் கல்லூரியில் அருப்புக்கோட்டை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.ஆனந்தவல்லி தலைமையில் நடைபெற்றது. இந்த சட்ட விழிப்புணர்வு முகாமில் பெண்கள் படிக்கும் மற்றும் தொழில் செய்யும் இடங்களில் பாலியல் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல், பெண்கள் பாதுகாப்பு எண் 181, போதைப் பொருள் பழக்கம் ஒழிப்பு, சுய ஒழுக்கம், மாணவர்கள் வாகனம் ஓட்டும்போது தலைக்கவசம் அணிய வேண்டியது, குழந்தை திருமணம், பெண் கல்வியின் அவசியம் என பல்வேறு விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டது.

இந்த சட்ட விழிப்புணர்வு முகாமில் இலவச சட்ட உதவி மைய வழக்கறிஞர்கள் வீரராஜ், லாவண்யா, சரண்யா, கணேஷ் பாண்டி, இளமதி, கல்லூரியின் செயலாளர், கல்லூரியின் துணை சேர்மன் விக்னேஷ் குமார், கல்லூரியின் முதல்வர் மற்றும் துணை முதல்வர், கல்லூரி பேராசிரியர்கள், 250 க்கு மேற்பட்ட மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை அருப்புக்கோட்டை வட்ட சட்ட குழு பணியாளர் சேகர் செய்திருந்தார்.

## கராத்தே, சிலம்பத்தில் உலக சாதனை மற்றும் சர்வதேச போட்டியில் வெற்றி பெற்று சாதனை படைத்த திருமங்கலம் மாணவர்களுக்கு பாராட்டு விழா




**திருமங்கலம், டிச.10-**

கராத்தே மற்றும் சிலம்பத்தில் உலக சாதனை மற்றும் சர்வதேச கராத்தே போட்டியில் வெற்றி பெற்று சாதனை படைத்த திருமங்கலம் சென்டோபுஷி மார்ஷியல் ஆர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் அகாடமி மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

சென்னை மான்ட் போர்ட் ஸ்டேடியத்தில் ஆஸ்கார் புக் ஆப் வேர்ல்டு ரெக்கார்ட்ஸ் அமைப்பின் சார்பில் கால்கள் மற்றும் கண்களை கட்டிக் கொண்டு தொடர்ந்து 45 நிமிடம் சிலம்பம் சுழற்றுதல் மற்றும் கராத்தேவில் தொடர்ந்து 45 நிமிடம் முன் உதை செய்து உலக சாதனை படைத்திடும் நிகழ்வு நடைபெற்றது.இதில் மதுரை திருமங்கலத்தை சேர்ந்த உலக பாரம்பரிய சோட்டா கான் கராத்தே சம்மேளனத்தின் தமிழ்நாடு பொருளாளர் பொன்னுச்சாமி (எ) கராத்தே ராஜா மற்றும் தொழில்நுட்ப இயக்குனர் திருப்பதி ஆகியோர் தலைமையில் பங்கேற்ற திருமங்கலம் சென்டோபுஷி மார்ஷியல் ஆர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் அகாடமி, முதல் ஆயுதம் சிலம்பாட்ட பள்ளி மாணவர்கள் 7 பேர்,மாணவிகள் 5 பேர் கலந்து கொண்டு உலக சாதனை படைத்து சான்றிதழ் மற்றும் பரிசு கோப்பைகளை வென்றனர்.

இதேபோல் கோவை சூலூர் பகுதியிலுள்ள தனியார் கல்லூரியில் ஓமன், இந்தோனேஷியா, சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து மற்றும் இந்திய கராத்தே வீரர்கள் பங்கேற்ற சர்வதேச அளவிலான கராத்தே போட்டியில் மதுரை திருமங்கலம் சென்டோபுஷி மார்ஷியல் ஆர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் அகாடமி சார்பில் பங்கேற்ற மாணவ, மாணவிகள் கடுமையாக போட்டியிட்டு 12 தங்கம், 13 வெள்ளி மற்றும் 2 வெண்கல பதக்கங்களை வென்று சாதனை படைத்தனர். இந்த போட்டியில் தர்ஷன் (19) எனும் மாற்றுத்திறன் கல்லூரி மாணவர் சண்டை மற்றும் கட்டா பிரிவில் வெற்றி பெற்று முதலிடம் பிடித்து தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்தார். இந்த போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகள் மலேசியாவில் நடைபெறுகின்ற சர்வதேச கராத்தே போட்டியில் பங்கேற்க தகுதி பெற்றனர்.

இதனிடையே கராத்தே மற்றும் சிலம்பத்தில் உலக சாதனை மற்றும் சர்வதேச கராத்தே போட்டிகளில் வெற்றி பெற்று சாதனை படைத்த திருமங்கலம் மாணவ மாணவியருக்கு பாராட்டு விமா நேற்று சிறப்பாக நடைபெற்றது.அப்போது சாதனை படைத்த அனைவருக்கும் பரிசுகள் வழங்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.அத்துடன் மாணவ, மாணவிகளுக்கு பயிற்சியளித்த சென்டோபுஷி மார்ஷியல் ஆர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் அகாடமி நிறுவனர் பொன்னுச்சாமி (எ) கராத்தே ராஜா, டெக்னிக்கல் இயக்குனர் திருப்பதி ஆகியோருக்கும் பொன்னாடை அணிவித்து பாராட்டு தெரிவிக்கப்பட்டது.இவ்விழாவில் பெற்றோர்கள்,பயிற்சியாளர்கள் வரதராஜன், மணிகண்டன், சல்மான் கான்,ஷக்கீல் கமலேஷ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கொடைக்கானலில் மருந்து சந்தைப்படுத்துவோர் கூட்டம்



**மதுரை, டிச 10-**

மலைகளின் இளவரசி கொடைக்கானலில் மருந்து சந்தைப்படுத்துவோர் அமைப்பான ஏஐபிபிஇ-ன் மதுரை மாவட்டம் சார்பாக பொதுக்குழு கூட்டம் இரண்டு நாட்களாக நடைபெற்றது. இக்கூட்டம் மதுரை மாவட்டத் தலைவர் கார்த்திகேயன் தலைமையிலும், மதுரை மாவட்டச் செயலாளர் பா.ராஜூ முன்னிலையிலும் செயற்குழு உறுப்பினர்கள் ஆலோசனையிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் 100-க்கும் மேற்பட்ட மாநில, மண்டல, நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் மாவட்ட பொருளாளர் செந்தில்குமார் நன்றியுரை கூறினார்.



பிரேக்ஸ் இந்தியா மற்றும் டிபிகே கோ.லிமிடெட் சமீபத்தில் மூலதனம் மற்றும் வணிக கூட்டணி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இதன் மூலம், டிவிஎஸ் குழுமத்தின் ஒரு நிறுவனமான பிரேக்ஸ் இந்தியா, டிபிகே நிறுவனத்தின் முதன்மை மூலதன முதலீட்டின் மூலம் 10 சதவீத பங்குகளை பெறுகிறது. இந்த முதலீடு இரு நிறுவனங்களுக்கும் முக்கியமான முன்னேற்றமாகும். இதில் டி.பி.கே.நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி கெஉரு ஒகடா, பிரேக்ஸ் இந்தியா மேலாண்மை இயக்குநர் ஸ்ரீராம் விஜய் ஆகியோர் உள்ளனர்.

